தாளம்பாடி கிராம ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை- திரு.V.சதீஸ்குமார் அவர்கள்.

ந.க.எண். /2024/ஊராட்சி நிர்வாகம் நாள் - .05.2024

பொருள்:-

மனைப்பிரிவு அங்கிகாரம் - நாமக்கல் மாவட்டம் - நாமக்கல் வட்டாரம் - தாளம்பாடி ஊராட்சி - சர்வே எண் 157/3E - ல் 0.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :-

1. அரசானை (நிலை) எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3) துறை நாள் - 04.05.2017
2. அரசானை (நிலை) எண்.112, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, ந.வ.4(3) நாள் - 22.06.2017
3. அரசானை (நிலை) எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, ந.வ.4(2) நாள் - 04.06.2004.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித இ.ந.க.எண். NKL/FATHV0ZD/13969/2023/TCP நாமா 30.11.2023, SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT NO.390/2023 நாள் 30.11.2023.
5. தானப்பத்திர ஆவண எண்.4332/2023 நாள் 27.09.2023.
6. தனியாரால் வழங்கப்பட்ட ரூ.20/- க்கான உறுதிமொழி பத்திரம்.
7. கூராய்வுக் கட்டணமாக தாளம்பாடி ஊராட்சிக்கு செலுத்திய நாள் 29.05.2024 (இரசீது எண்:2024-2025/8/9/18/7/3)
8. நகர் ஊரமைப்புத் துறைக்கு உரிய கட்டணம் (3% Market value) செலுத்தப்பட்ட இசலான் எண்: 20240403015074 நாள்.03.04.2024 .

****

பார்வை (1) மற்றும் (2)ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம் நாமக்கல் வட்டாரம் தாளம்பாடி ஊராட்சி/கிராமம் சர்வே எண்கள். 157/3E - ல் 0.85 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைபடுத்தப்பட்டு நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.390/2023 இல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு பார்வை 5 இல் காணும் தானப்பத்திரம் மூலம் சேந்தமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலமாக தாளம்பாடி ஊராட்சிக்கு தானமாக பதிவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

தாளம்பாடி கிராம ஊராட்சி மன்றத் தீர்மான எண்.22 நாள் 27.09.2023 இன்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள் ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளபட்டதிற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

சாலைகளை பொதுச்சாலையாக சர்வே காலங்களில் வரையரை செய்வதற்கும் சாலைகளை ஒப்படைப்பு செய்வதற்கும் உட்பிரிவு கட்டணத்தொகையினை செலுத்த மனுதாரரால் பார்வை 6 இல் கண்டுள்ளவாறு ரூ.20/- கான ஒப்புதல் பத்திரம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 7-ல் கண்டுள்ளவாறு கூராய்வு கட்டணம் 17 மனைகளுக்கு ரூ.17000/- (இரசீது எண்: 2024-2025/8/9/18/7/3) நாள்:29.05.2024 மற்றும் மனை உட்பிரிவிற்கு 3% Market value கட்டணம் பார்வை 8-ல் கண்டுள்ளவாறு ரூ.5100/- (ரூபாய் ஐந்து ஆயிரத்து நுறு மட்டும்) (இசலான் எண்: 20240403015074, நாள்.03.04.2024) உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே நாமக்கல் நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் மனைப்பரிவு வரைபட தொழில் நுட்ப அனுமதி SWP/DTCP/NAMAKKAL/LAYOUT N0.390/2023-ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள், மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்
ஊராட்சி மன்றம்
தாளம்பாடி

தலைவர் ஊராட்சி மன்றம்
தாளம்பாடி கிராம ஊராட்சி
நாமக்கல் வட்டாரம்

பெறுதல்

திரு.K.சுதா,
கதவு எண் 2/129-1,
தாளம்பாடி கிராமம்,
நாமக்கல் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல்

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் (அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது)
2. சார்பதிவாளர் அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் (அவர்களுக்கு அனுப்பப்படுகிறது)
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்). நாமக்கல்
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) நாமக்கல் வட்டாரம். (தகவலுக்காக)